மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் எந்த அடிப்படையில் பேசுகிறீர்கள்?

திரு. எஸ். ஆர். இராதா: கேள்வியைப் பற்றிய பாயின்ட் ஆப் ஆர்டர். பேரவைத் தலைவர் அவர்கள் துரை கோவிந்த ராஜன் அவர்கள் கேள்வியைக் கேட்கத் தெரியாமல்......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்படிச் சொல்லவில்லை. துரை கோவிந்தராஜன் கேள்விக்கு அமைச்சர் பதிலளித்த காரணத்தால் மூலக் கேள்வியிலிருந்து துணைக்கேள்வி வேறு எங்கோ செல்லுகிறது என்றுதான் நான் சொன்னேன். தாங்கள் நான் சொன்னதைக் கேட்கவில்லை.

திரு. கோ. இளங்கோவன்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகிறபோது கல்லணையில் மிகுதியாக உள்ள தண்ணீர் கொள்ளிடத்தில் விடப்படுவதாகச் சொன்னார்கள். அதே நேரத்தில் அதற்கு மேல்புரத்தில் வென்ட்ராம்ப் இருந்தது. அது தற்போது செயல்படாத காரணத்தால் கிளிகூண்டில் உடைப்பு எடுத்தது. மீண்டும் திருத்தும் வகையில் 'வென்ட்' கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தனிக் கேள்வி போடவும்.

கிருதமால் நதி சீரமைப்பு.

*751 வினு—திரு. வ. மு. சுப்பிரமணியன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர். கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வைகை ஆற்றில் கட்டப்பட்டிருக்கும் விரகனூர் மதகு அணையுடன் கிருதமால் நதியை இணைத்து கிருதமால் நதியைச் சீரமைக்கும் திட்டம் ஏதேனும் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனின், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:—(அ) ஆம்.

(ஆ) கொந்தகை கண்மாயை விரகனூர் ரெகுலேட்டர் இருக்கும் இடத்தில் வைகை ஆற்றுடன் இணைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதனுல் கொந்தகை கண்மாயில் இருந்து வரும் உபரித் தண்ணீரை கிருதமால் ஆற்றில் கலக்கும் இத்திட்டத்திற்கான மதிப்பீடு ரூ. 10 இலட்சம் ஆகும். இது வைகை கால்வாய் சீரமைப்புத் திட்டத்தின் கீழ் நிறைவேற்றத் திட்டமிடப்பட்டுள்ளது.

1978 ஏப்ரல் 1]

திரு. ஒ, சுப்பிரமணியன் : விரகனூர் அணைக்கட்டிலிருந்து கொந்தகைக் கண்மாய்க்கு மட்டுந்தான் தண்ணீர் விடப்படுகிறது என்று சொன்னார்கள். கிருதமால் நதித் திட்டத்தை நிறைவேற்றினால் மிகவும் பின்தங்கிய முதுகளத்தூர், அருப்புக்கோட்டையில் சில பகுதிகள் வறட்சி நீங்கி விளைவு பெறும் வசதி ஏற்படும். எப்படியும் அந்தப் பகுதிக்குத் தண்ணீர் பாய்ச்சி அந்தத் திட்டத்தை நிறைவேற்ற அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : முதல் கட்டமாக கொந்தகைக் கண்மாய்க்குத் தண்ணீர் வருகிற திட்டம் எடுத்துக் கொள்ளப்படும். அதற்குப் பிறகு இதிலே உபரித் தண்ணீர் இருக்குமானால் அது கிருதமால் நதியில் வருவதற்கான இரண்டாவது கட்டத்தை எடுத்துக் கொள்ளலாம்.

திரு. இரா. தாமரைக்கனி : வைகைச் சீரமைப்புப் பணியில். துணைக் கால்வாய்கள் வெட்டும்போது ஆற்றுக்குள்ளே மண்ணால் கரைகள் அமைக்கப்பட்டிருந்தன. துணைக் கால்வாயில் வெள்ளம் வந்த நேரத்தில் அதை அரித்துவிட்டதாகத் தெரிகிறது. இதனால் அரசுக்குப் பல லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறதா? நிர்வாகப் பொறியாளர் வேலை நீக்கம் செய்யப்பட்டாரா? கான்ட்ராக்ட் எடுத்தவர் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : நிர்வாகப் பொறியாளர் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டது உண்மை. அதிலே சில புகார்கள் வந்திருக்கின்றன. அது குறித்து அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. செ. சிவசாமி : இந்தக் கால்வாய்த் திட்டத்தின் அடிப்படையில் மானாமதுரை தாலுக்காவில் எத்தனை ஆயிரம் ஏக்கர் நிலமும், முதுகுளத்தூர் பகுதியில் எத்தனை ஆயிரம் ஏக்கர் நிலமும் பயன் பெறும்?

மாண்புமிகு திரு, ச. இராமச்சந்திரன் : முதல் கட்டமாக கொந்தகைக் கண்மாய்க்குத் தண்ணீர் கொண்டு வருவது திட்டம். அதற்குப் பிறகுதான் உபரித் தண்ணீர் இருந்தால் கிருதமால் நதிக்கு வரும். அதற்கான திட்டம் இனிமேல்தான் தயாரிக்கப்படும். அந்தத் திட்டம் வரும்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிற விவரம் தரப்படும்.

திரு. டி. இராமசாமி : வைகை பாசன ஆயக்கட்டில் இராமநாதபுரத்தில் பெரிய கண்மாய் மட்டுந்தான் இணைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கண்மாயின் மூலம் 3,000 ஏக்கர் பாசன வசதி பெறுகிறது. அதே நேரத்தில் இராமநாதபுரத்தில் சக்கரைக் கோட்டை கண்மாய் என்ற பெரிய கண்மாய் இருக்கிறது. 5,000 ஏக்கருக்குப் பாசன வசதி தரும்; வைகைப் பாசனத்தோடு அதனைச் சேர்க்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அரசு பரிசீலிக்கும்.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : அமைச்சர் அவர்கள் கொடுத்த பதில் எங்கள் பகுதிக்குப் பெரிய அதிர்ச்சியை ஏற்படுத்தும் என்று கருதுகிறேன். கிருதுமாலின் மூலம் முதுகளத்தூர் பகுதிக்குத் தண்ணீர் வேண்டுமென்பது நீண்ட நாள் கோரிக்கை. கொந்தகைக் கண்மாய்த் திட்டத்தை நிறைவேற்றும்போதே முதுகளத்தூர் பகுதிக்கு பாசன வசதி செய்து தரும் வகையில் கிருதுமால் நதி மூலம் தண்ணீர் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா?

(முற்பகல் 9-20)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, கொந்தகை கண்மாய்க்குத் தண்ணீர் விடுவதாலே மாண்புமிகு உறுப்பினர்க்கு என்ன வேதனை என்று எனக்குத் தெரியவில்லை. ஏற்கனவே வைகை ஆற்றுப் பாசன ஆயக்கட்டிலே, அந்த பேஸினிலே இருக்கக்கூடிய கண்மாய் அது. அதற்குத் தண்ணீர் சரியாக வருவதில்லை என்ற குறை இருக்கிறது, ஆகவே தண்ணீர் எடுத்துக் கொள்கிறோம். அதற்கு மேல் தண்ணீர் அதிகமாக இருந்தால் கிருதுமால் நதிக்கு இணைக்க வேண்டுமென்று திரு. சுப்பிரமணியம் அவர்கள் தெரிவித்தார்கள், அதைப்பற்றி பரிசீலிக்கலாம் என்று தெரிவித்திருக்கிறேன். முதுகளத்தூர் பற்றி என்னிடம் தகவல் இப்போது இல்லை.

திரு. என். லட்சுமிநாராயணன் : தலைவரவர்களே, கொந்தகை கண்மாயிலே விட்டதுபோக கிருதுமால் நதிக்கு எவ்வளவு உபரி நீர் கிடைக்கும் என்று நிபுணர்கள் கணக்கிட்டிருக்கிறார்கள்? அந்த கொந்தகை கண்மாய் மூலமாக அபிராம் கண்மாய்க்குத் தண்ணீர் பயன்படுத்த வகை செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தனிக் கேள்வி போட்டால் விவரம் தரப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 752-ம் 753 ம் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளி வைக்கப்படுகின்றன.

நூக்குமர ஏற்றுமதி

*754-வினா திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு உணவு-கூட்டுறவுத்துறைஅமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) 1976-77-ம் ஆண்டு நமது மாநிலத்திலிருந்து வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட நூக்குமரத்தின் மதிப்பு எவ்வளவு?

(ஆ) அதை அதிகப்படுத்த அரசு எடுத்திருக்கும் முயற்சி என்ன?